# இலக்கியத்தில் அறம்

16

**முனைவர் தே. நாகலெட்சுமி,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்,**
**தெ.தி.இந்து கல்லூரி, நாகர்கோவில்**
**nagalekshmisuresh@gmail.com.**

**முன்னுரை**

அறம் என்றால் தருமம். தருமம் செய்தால் துன்பம் நீங்கும் என்பர் இதனை ஔவையார் “அறம் செய விரும்பு” என்கிறார். அற ஒழுக்கம் தமிழ் மொழிகளில் மனித குலத்தை இன்புறுத்தி அதன் வழியே வருகின்ற அற ஒழுக்கத்தை வலிமை உடையதாக உணர்த்துகின்றது. மக்கள் ஆறறிவு உடையவர்கள் ஆறாவது அறிவினால் உண்டாவது தான் ஒழுக்கம் என்ற அறம் இவ் அற ஒழுக்கம் மனிதனுக்கும் விலங்கினத்திற்கும் வேறுபாட்டை காணலாம். ‘அற ஒழுங்கு ஊரை ஆளும்’ என்பது பழமொழி அற ஒழுக்கத்தின் படி நடந்தவர்களை நாடு போற்றும் என்பர். வாழ்க்கை முழுமை பெற வேண்டும் என்றால் அறத்துடன் வாழ பழகிக் கொள்ள வேண்டும். அறங்களை வணிக அறம், அரசியல் அறம், போர் அறம் கொடை உதவி, வாய்மை என்றொல்லாம் பொருள் கொள்ளப்படுகின்றது.

**பொருளுரை**

நம் முன்னோர்கள் மனித வாழ்வை அகம், புறம் என இருவகையாற் பிரித்தனர். புறம் போர், புகழ் கொடை, வீரம். ‘அறனென்ப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று‘ என்கிறார் வள்ளுவர். இல்வாழ்வின் பொருளே அறம் மனித வாழ்வோடு பின்னி பிணைந்துள்ளது. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. அறம் என்பது தானம் என்றும் ஒழுங்காகப் பயணித்தல் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.

பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை படம்பித்து காட்டுவது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியங்கள் தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் காதல் உணர்வை உயர்ந்த இடத்தில் காலத்து போற்றுகின்றனர். பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. “பிறர்நோயும் தம் நோய் போல் போற்றி அறன் அளிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்” என்று தம் துன்பம் போல் கருதி உதவுதல் பற்றி நல்லாதனார் கலித்தொகையில் குறிப்பிடுகின்றார். உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பது தான் என்கிறார் நல்வேட்டனார் உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ

குறிப்பிடுகின்றார். வாய்மையே பெரிய அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதனை, ‘பொய்யாச் செந்நா’ (புறநானூறு 168 : 19), ‘பொய்படுபு அறியா வயங்கு செந்நாவின்’ (பதிற்றுபத்து, 58:9) என்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

‘நிலம் நிறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல்நீ பொய்பு அறியவையே’ (பதிற்றுபத்து 63:6-7)

‘நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்’ (புறம்.3:14)

முதலான பாடல் அடிகளில் நிலம் புடைப் பெயர்தலும் பொய் சொல்லக்கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆசிரிய அறமாக அறிவு திறன் நல்லொழுக்கம் பெருத்தன்மை சால்பு உடையோரே ஆசிரியராகயிருந்தனர். கணக்காயர் ஆசான் என்றும் அழைக்கப்பெற்றனர். கலையில் தெளிவு, கட்டுரைவன்மை நிலம் மலைநிறைகோல் மலர் நிகர்மாட்சி உலகியல் அறிவு உயர்பண்பு உடையவர்களை ஆசிரியர் பணிக்கு தக்கவராகத் தெரியும் செய்தனர். மதித்தனர். இத்தகையே ஆசிரியரை தேடிப் பெற்றோர் தம்பிள்ளைகளைக் கல்வி பயில அவரிடம் ஒப்படைத்தனர். ஐயம், திரிபு, அறியாமை நீங்க கற்று முடிந்தப்பின் ஆசிரியர் பெற்றோரை அழைத்த அவர்களிடம் அப்பிள்ளைகளை ஒப்படைத்தல் சிறந்த அறமாக போற்றப்பட்டது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதிணென் கீழ்கணக்கும் பழந்தமிழின் சால்பை விளங்கி காட்டுகின்றன. தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது பண்டையத் தமிழரின் சிறந்த கொள்கையாகும். காடும் காடுச் சார்ந்த இடமும் முல்லை என்றும் மலையும் மலைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும் வயறும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும், தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் சிறந்ததொரு கொள்கையாகும் மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்கு ஒழுங்கு முறைகள் வகுத்து கொடுத்த இலக்கணத்திற்கும் பொருள் இலக்கணம் என்று பெயர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திணைகள் வகுத்து கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்கு ஒழுங்கு முறைகள் வகுத்து கொடுத்த இலக்கணத்திற்கும் பொருள் இலக்கணம் என்று பெயர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திணைகள் வழக்கில் இருந்து வந்தன. முதலெனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே என்று தொல்காப்பியர் தமக்கு முன்பே இலக்கணம் வகுத்திருந்த ஆசிரியரைச் சுட்டிக்காட்டுகின்றார்.

திணைகள் என்னும் சொல்லுக்குக் குடி என்றும் ஒரு பொருள்

உண்டு. குடிகள் வாழும் நிலமும் திணை எனப்பட்டது திணை என்பது ஒழுக்கம் என்பர். ஐந்து திணைகளும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியவை மக்கள் வாழும் இயல்பு அங்கு உயிர் வாழும் விலங்கேள். பறவைகள் செடி கொடிகள் மரங்கள் உழவு பயிர்கள் மக்கள் வழிபாட்டுத் தெய்வங்கள் ஆகியவற்றை குறித்து நிற்கின்றன. அறம் என்ற சொல்லிற்கு கடமை, நோன்பு, தர்மம், கற்பு, இலலறம், துறவறம், நல்வினை போன்றன பொருள் கொள்ளப்படுகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்டே ஒழுக்கமுறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்றும் கூறுகின்றனர். மக்கள் இம்மையிலும் மறுமையிலும் மேன்மை பெற்று வாழ வேண்டும் என்றால் அறத்தையே மேற்கொள்ள வேண்டும் என்பர். ஒரு பிறப்பில் அறம் செய்தால் மறு பிறப்பில் பேரின்பத்தை பெற முடியும் வாழும் காலத்திலும் நன்றாக இருப்பர். எப்பொழுதும் எந்த நேரத்திலும் அறம் செய்யலாம். அறம் செய்தால் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைந்து கொள்ள முடியும். ஒழுக்க நீதி தவறியவன் மறுப்பிறவாயில் வாழத்தகுதியற்றவன் என்கிறார். ஔவையார் நிலையில்லாத உடம்பு இருக்கும் போதே நிலையான அறத்தைச் செய்து துணையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

“அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத்துணை”

என குறிப்பிட்டுள்ளார். அதாவது பொறாமை, அவர, வெகுளி இன்னாச் சொல் போன்ற நான்கையும் களைந்தவனே அறஞ்செய்யும் ஆற்றல் உடையவனாகும் என்று குறிப்பிடுகின்றார். இக்குற்றங்களை உடையோர் செய்யும் அறம் அறமாகமாட்டாறு. இதுவே தெய்வம் புலவரின் அறம் பற்றிய தெளிவுரையாகும். இதனையோ. “அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்’ என குறிப்பிடுகின்றார். பிறவிப்பயனைத் தருவதும் அழியா பேரின்பத்தை தருவதும் அறமே ஆகும். தனிமனிதனாயினும் சமுதாயமாயினும் முழுமையான நிலையில் சிறப்புற வாழ வழி வகுப்பது அறச்சிந்தனையே ஆகும். இதுவே அறம் என்று முழுமையான பொருள் கூறிவிட முடியாது தனிமனிதனின் நடைமுறைகள் அவரவர் செய்கின்ற நற்செயல்களின் தொகுதியே அறம் எனக் கருதப்படுகின்றது. முக்கியமான வார்த்தைகளில் அறம் என்பது தனிமனித அறம் ஒழுக்கம் பெற்றோரை வணங்குதல் தீயமை செய்யாமை புறங்கூறாமை புலால் மறுத்தல் செய்ந்நன்றியறிதல் எனக் கொள்ளப்படுகின்றன. அறம் என்பது செயலா சொல்லா எண்ணமா என்ற நிலையில் செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும் எண்ணம் தூய்மையாக இருந்தால் சொல்லும் செயலும் தூய்மையாக அமையும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ளது மனம். அம்மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயல்வதே அறமாகும்.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

என்கிறது குறள். அறம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு உரிய செயல்களைச் செய்தல் நற்செயல் செய்தல் என்றும் மலையமான் உரையில் கூறுகின்றார். அறம் என்றால் பசித்தோர்க்கு உணவும் ஏழைகளுக்கு பணமும் உறைவிடம் உடை வழங்குவது அறம் என்கிறார் மணிமேகலை ஆசிரியர் சீத்தலை சாத்தனார். உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்கிறார். இக்கருத்தை கணித மேதாவியார் ஏலாதிப் படைப்பிலும் வலியுறுத்துகிறார் ஒழுக்கம் வாழ்வில் இன்றியமையாதது என ஆசிரியர் விளம்பி நாகனார் நான்மணிக்கடிகையில் குறிப்பிடுகின்றார்.

கவிஞர் காரியஆசான் தனது சிறுபஞ்சமூலத்தில் தன் வீட்டில் பிறருக்கு உணவு பரிமாறுவதும் தாகத்தில் வருபவர்க்கு தண்ணீர் கொடுப்பதும் நிழல் தரும் மரங்கள் கொண்ட சாலைகள் அமைப்பிலும் அறம் என்கின்றனர் சமணப் படைப்பான நாலடியார் அறத்தை வரையறுக்கும் போது நாம் வாழ்க்கையில் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை காட்டுகின்றார். இவ்வாறு சமுதாயத்தை பிரதிபலிக்கும் இலக்கியங்கள். அச்சமூகம் சுட்டிக்காட்டி வரும் அறக் கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மனிதன் சமூகத்தால் தொன்றுத்தொட்டு மரபு வழியாக வந்தவைகள் தான் அறங்கள் அறநெறிகளின் அணுகுமுறைகள் மனித வாழ்க்கை சூழல்களிலிருந்து பிறந்த மனித வாழ்க்கை எதிர்வினைகளை இலக்கியம் படம் பிடித்து காட்டுகின்றன. காலந்தோறும் மாறிறம் வளர்ந்தும் வந்திருக்கின்ற இலக்கியங்களை அறநெறி எவ்வாறு வழிநடத்திச் செல்கிறது என்று காண்பதும் இலக்கியங்கள் உள்ளே பொதிந்து கிடக்கின்ற அறநெறி பண்புகளையும் ஆற்றலையும் காண்பது அறநெறி அணுகுமுறைகளின் நோக்கங்களாகும். திறனாய்வு அணுகுமுறைகளில் இது மிகவும் பழமையானது பழங்காலத்தில் அறிஞர்கள் இலக்கியங்களை அறங்களின் அடிப்படையிலே மதிப்பிட்டார்கள். தொல்காப்பியர் அறங்களை வலியுறுத்துகின்றார். கிரேக்கத்தில் பிளேட்டோ வலியுறுத்துகின்றார். ஆங்கிலத்தில் மாத்யூ அர்னால்டு அறம் பற்றி வலியுறுத்தி பேசுகின்றார். இலக்கியத்தில் எப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்பதை முக்கியம் இதுவே இலக்கிய அறம் என்கின்றனர். இதனை அறநெறி அணுகுமுறை என்பர். இலக்கிய உலகில் அறநெறி கோட்பாடுகள் சமூகவியல் நோக்கோடு ஆராயப்படுகின்றன. தொல்காப்பியர் இன்பமும் பொருளும் அறனும் என்றார்க்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை என கூறுகின்றார்.

சங்க இலக்கியங்களில் அன்றைய காலத்து அறநெறி கருத்துக்கள் ஏராளம் அக இலக்கியங்கள் புற இலக்கியங்களும் அறநெறிகள் அடிப்படை வாழ்க்கை நெறியை தந்திருக்கின்றன. மேலும் காப்பியங்கள் தோன்றிய போதும் பாவிகம் என்ற நிலையில் அவை அறம் பற்றி பேச வேண்டும் என்று இருந்திருக்கின்றது.

"அரசியல் பிழைத்தோர்க்கும் அறம் கூற்று ஆவாதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்" (சிலப்பதிகாரம்)

அறநெறிச் சார்ந்த கருத்துக்களே அமைகின்றன. சங்க காலம் முதல் தற்காலம் இலக்கியங்கள் வரை அறநெறித் திறனாய்வை மேற்கொள்கின்றன. மேற்கொள்கின்றன. மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரம் என்ற நாவல் பெண்ணின் பெருமையைப் பேசுவதோடு என்பதோடு மட்டுமல்லாமல் சிறந்த ஆண், சிறந்த பெண், குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதை மரபு வழியிலான தமிழ்ச் சமுதாயத்தின் அறவழியில் நின்று பேசுகின்றது. அதன் பாத்திர பின்னல்களும் உரையாடல்களும் அறநெறி கோட்பாட்டின் மூலம் வெளிப்படுகின்றன. இன்றைய காலக்கட்டத்தில் மரபு வழிப்பட்ட அறங்கள் விமர்ச்சிக்கப்படுகின்றன இவை காலத்தினுடைய தமிழ் சமுதாயத்தின் அறநெறி கோட்பாடுகளை அளவிட உதவுகின்றன. காலம் மற்றும் இடச்சூழலுக்குகேற்ப இலக்கியங்கள் வடிவ அமைப்பு முறையில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. சங்காலத்தில் வீரம் வாழ்வியல் ஒழுக்கங்களாக இருந்தன உருவும் திருவும் ஒத்த இருவர் கருத்தொருமித்துக் காதல் கொள்வது அறமாக இருந்தது. தலைவியின் காதல் தோழிக்கு தெரியவந்து பின் செவிலித்தாய் மூலம் நற்றாய்க்குத் தெரியவந்து நற்றாய் மூலம் தலைவியின் தந்தைக்குத் தெரிய வரும் தலைவி நேரிடையாக தன் காதலை தன் வீட்டாரிடம் சொல்வது மரபில்லை. இதனை அறத்தொடு நிற்றல் என்பர். கற்பு என்பது மிகவும் முக்கியமான கருத்தமைப்பு. இது காலந்தோறும் மாறி வந்துள்ளது. ஒருத்திக்கு ஒருவன் என்பது புனிதமான ஒழுக்கமாக பெண்ணுக்கு வற்புறுத்திச் சொல்லப்பட்டது. இன்று கற்புநிலையென்று சொல்ல வந்தால் அதனை இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்று பாரதி சொல்லும் நிலை ஏற்பட்டது.

**முடிவுரை**

இவ் அறக்கருத்துக்கள் பண்டைய தமிழர்களின் பண்பாடு பழக்க வழக்கங்கள், தமிழர்க்கு மட்டும் பொருந்த கூடியது அல்ல. மாந்தர்கள் அனைவருக்கும் பொருந்த கூடியவையாகும். வாழவியல் நெறிகள் என்ற சொல்லிற்கு ஆங்கில சொற்களஞ்சியம் Ethics என்பதாகும் Ethics என்ற ஆங்கில சொல்லுக்கு இணையாக தமிழ்ச்சொல் அறநெறிகள். அறவியல் நன்னெறிகள் கோட்பாடுகள் வாழ்வியல் ஒழுகலாறுகள் பண்புகள் ஒழுக்க முறைகள் அறச் சொற்களாக வழங்கி வருகின்றன வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பர். ஆதலால் அறம் சார்ந்த வாழ்வியலை அனைவரும் மேற்கொள்வோம்.